செ.வெ.எண். 973 நாள் 15.12.09

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

சமையல் எரிவாயு முகவர்களின் எரிவாயு விநியோகத்தில் ஏற்படுகின்ற சேவைக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்பொழுது சமையல் எரிவாயு நுகர்வோர்களால் புகார்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. சென்னை மாநகரம் மற்றும் புறநகர் பகுதிக்குட்பட்ட சமையல் எரிவாயு நுகர்வோர்கள் நலன் கருதி மேற்கண்ட சேவைக் குறைபாடுகள் குறித்தப் புகார்களை நேரடியாக தெரிவித்து நிவாரணம் பெற ஏதுவாக டிசம்பர் 19ம் தேதி சனிக்கிழமை காலை 11.00 மணி முதல் மதியம் 1.30 மணி வரை சென்னை 600 021, பழைய வண்ணாரப்பேட்டை, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, கதவிலக்கம் 345 என்ற முகவரியில் அமைந்துள்ள சர் தியாகராயா கல்லூரி வளாகத்தில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, இணை ஆணையாளர் திரு. சி. என். மகேஸ்வரன் தலைமையில் எரிவாயு நுகர்வோர் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது. இக்குறைதீர் கூட்டத்தில் எண்ணெய் நிறுவன உயர் அலுவலர்களும், எரிவாயு முகவர்கள் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ள உள்ளனர். எனவே, சென்னை மாநகரம் மற்றும் புறநகர் பகுதியைச் சேர்ந்த எரிவாயு நுகர்வோர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு எண்ணெய் நிறுவன உயர் அலுவலர்களிடம் தங்கள் குறைகள் மற்றும் புகாரினை நேரடியாக தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஒம்./-) க. ராஜாராமன்
ஆணையாளர்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

ஆணையாளருக்காக 15/12

15/12/09